18th March 1966]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The Government of India have under consideration, a proposal to encourage industries to take up production of Defence Stores, Components and other technical products. For this purpose, they propose to extend necessary help in matters like supply of scarce raw materials.

திரு. வை. சங்கரன் : தனியார் துறையில் டிஃபென்ஸ்-க்கு இன்னின்ன 'காம்போனன்ட்ஸ்' வேண்டும். அதை தயாரிக்க வேண்டும், என்று ஏதாவது லிஸ்ட் கொடுக்கப்பட்டிருக்கிறதா? அவ்விதம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், அவ்விதம் தயாரிக்க யாராவது முன் வந்திருக்கிறார்களா? அதற்காக லைசென்ஸ் யாருக்காவது கொடுக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பாதுகாப்புக்குத் தேவையான உறுப்புகளை செய்வதற்காக அந்த இலாகா அதிகாரிகள் இங்கு வந்து ஸ்மால் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் போன்ற இடங்களில் தெரிவிக்கின்றார்கள். என்னென்ன தேவை என்பதை விளக்கக் கூடிய வகையில் தேவையான பொருட்களை எக்சிபிஷனில் வைக்கிறார்கள்—அதைப்பார்த்து, நம்முடைய சிறு தொழில் ஸ்தாபனங்கள் உறுப்புக்களை செய்யமுடியுமா, போதுமான அளவுக்கு சப்ளை செய்ய முடியுமா என்பதற்கான வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : சார், இப்போது பிஸ்டல், ரிவால்வர், போன்றவை கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே திருச்சியில் பிஸ்டல், ரிவால்வர் போன்றவற்றை தயாரிக்க முடியுமா? அதற்காக தனியார்கள் யாராவது முன்வந்தால் அவர்களுக்கு உதவி அளிக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

போலீசாருக்கு இடவசதி

* 336 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

போலீஸ் கான்ஸ்டேபிள்கள், ஹெட்கான்ஸ்டேபிள்கள் பணி புரியும் இடங்களிலிருந்து, மாவட்டத் தலைநகரங்களுக்கு டூட்டியில் போகும்பொழுது தங்குவதற்கு இடவசதி செய்யப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : அலுவல் முறையில் மாவட்டத் தலைமையிடங்களில் பணியாற்றச் செல்லும் தலைமைக்கான்ஸ்டேபிள்கள், போலீஸ் கான்ஸ்டேபிள்களுக்கு வடஆர்க்காடு, தஞ்சாவூர், கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் தங்குவதற்கு இடவசதி செய்யப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் இவர்கள் தங்குவதற்கென்று தனிப்பட்ட இடவசதி எதுவுமில்லை. மேற்படி

காரியத்திற்காக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தாற்காலிக கொட்டகை ஒன்றைக் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, சில மாவட்டங்களில் இவர்களுக்கு தங்குமிடங்கள் அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மற்ற மாவட்டங்களிலும், குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்தில் எப்போது இப்படிப்பட்ட வசதி செய்து கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : எப்போது அமைக்கப்படும் என்று சொல்ல முடியாது. அரசாங்கத்தில் இருக்கின்ற நிதி வசதிக்கு ஏற்ப ஒவ்வொன்றாக எடுத்து ஒத்தாசை உதவிகள் செய்து கொடுக்கப்படும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தாலுக்காக் களிலிருந்து தலைநகரங்களுக்கு போகிறபொழுது கான்ஸ்டபிள், ஹெட் கான்ஸ்டபிள் இவர்கள் இரவு நேரங்களில் தங்கவேண்டு மென்றால், சப்-ஜெயிலில் அல்லது போலீஸ் ஸ்டேஷனில்தான் தங்கவேண்டியிருக்கிறது. இதை தவிர்ப்பதற்கு ஏற்ற முறையில் அவர்கள் தங்களுக்கு வசதியாக அவர்களைப்பற்றி குறைகள் வராத முறையில் தங்குவதற்கு உடனடியாக சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கெல்லாம் போலீஸ் க்ளப் இருக்கிற தோ, அங்கே போலீஸ்காரர்கள் போகும்போது, அந்த இடத்தில் தங்கிக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட வசதியில்லாத இடங்களில் போலீஸ் ஸ்டேஷனில் தங்குகிறார்கள். போலீஸ் ஸ்டேஷனில் தங்குவது நியாயமும் கூடத்தான். அரசாங்கம் அவ்வப்போது ஆலோசித்து இவர்கள் தங்குவதற்கான வசதிகளை செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்து கொண்டிருக்கிறது. உடனடியாக எதுவும் செய்து விட முடியாது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், சில மாவட்டங்களில் இவர்கள் தங்குவதற்காக இடவசதி இருப்பதாகத் தெரிகிறது. இவ்விதம் அவர்கள் தங்கும்போது அவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்படுகிறதா அல்லது இலவசமாக தங்குகிறார்களா ? இது போன்ற மற்ற மாவட்டங்களின் தலைநகரங்களிலும் ஹாஸ்டல் வசதி செய்து கொடுக்க அரசாங்கத்தினிடம் திட்டங்கள் ஏதேனும் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : குறிப்பிட்ட போலீஸ் சம்பந்தப்பட்ட க்ளப்களில் தங்கினால்—அதாவது சென்னை போன்ற இடங்களில் இருக்கின்ற க்ளப்-களில் தங்கினால்—கட்டணம் வசூலிப்பதில்லை. ஆனால், அவர்கள் அங்கேயே சாப்பிட்டுக்கொள்வதற்கான வசதி இப்போது இல்லை. மேலும், எங்கெங்கு இவ்விதம் அமைக்க முடியுமோ அங்கெல்லாம் அமைக்கவேண்டும் என்று அரசாங்கம் எண்ணியிருக்கிறது.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS